திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிதும் மனம் உவந்து 4 கோடியே 74 லட்சம் ரூபாய் திருவண்ணாமலைக்கு ஒதுக்கினார்கள். ஆனால் இன்று வரை அதற்காக மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாற்றுக் கட்சியினர் ஏதோ 4 கோடியே 74 லட்சம் ரூபாய் கிடைத்ததாக நான் பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாகக் கூறுகிறார்கள். எனவே அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்பற்றி விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் இது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அது எந்தக்கட்டத்தில் இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து பதில் சொல்ல முடியும்.

ஆண்டிப்பட்டி—குன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

633—(*வினா எண் 4829)—திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி—குன்னூர் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் கீழ் ரெங்கசமுத்திரம், நாச்சியார்புரம், முத்தனம்பட்டி, அரப்படித்தேவன்பட்டி, சண்முகசுந்தரபுரம் போன்ற பதினொன்று கிராமங்களுக்குக் குடிநீர்வசதி செய்து தரும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்து தரப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஆண்டிப்பட்டி பேரூராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து, வினாவில் குறிப்பிட்டுள்ள 5 கிராமங்கள் உள்ளிட்ட 12 வழியோரக் கிராமங்களுக்குத் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள 6 கிராமங்களுக்கு எப்போது குடிநீர் வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதிலேயே 12 வழியோர கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே மக்கள் தொகை ஆயிரத்திற்குக் கூடுதலாக இருக்கின்ற கிராமங்களில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதமும், மக்கள் தொகை ஆயிரத்திற்குக் குறைவாக இருக்கிற

கிராமங்களுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் வீதமும் கிடைக்கும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1985ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10ஆம் நாள் முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்காபுரத்திற்கு 11/85 முதல் குடிநீர் வினியோகம் செய்யப் பட்டு வருகிறது.

வடகாட்டில் வேளாண்மைக் கிடங்கு.

634—(*வினா எண்.8125):—திரு. அ. வெங்கடாசலம்: மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி வட காட்டில் வேளாண்மைக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிட முள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம். இது குறித்து வேளாண்மை இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனை யிலுள்ளது.

(ஆ) பரிசீலனை செய்து உரிய ஆணை வெளியிடப்படும்.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி தொகுதியில் வடகாட்டு கிராமத்தில் வேளாண்மைக் கிடங்கு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலேயே மக்கள் தொகை அதிகமாகக் கொண்ட கிராமம் அது. அதோடு மட்டும் அல்லாமல் மாவட்டத்திலேயே விவசாயத்தில் முதல் இடம் பெற்றுள்ள கிராமம் அது. இந்த வகையில் அதைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் அங்கே விரைவில் வேளாண்மைக் கிடங்கு அமைப்பதற்கு வழிவகைகளைச் செய் வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம்சாரா பணிகளின்கீழ் வரக்கூடிய செலவினங்களைக் குறைக்கவேண்டும் என்று அரசு முடிவை மேற் கொண்டு அதையொட்டி புதிய இடங்களில் ஏற்படுத்த 1985-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ம் நாள் முதல் தடை விதித்து இருந்தது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரி வித்து இருக்கின்ற கருத்தின் அடிப்படையில் நிதித் துறை யோடு கலந்து ஆலோசித்து உரிய ஆணையை வெளியிடும்.